தமிழ் வாழ்க

# தமிழ்ப் பொழில்

துணர்: ௫௫ மலர்: ௬

திருவள்ளுவர் யாண்டு ௨௰௧௨
துன்மதி: மார்கழி
(1981 டிசம்பர்—சனவரி)

கரந்தைத் தமிழ்ச் சங்க வெளியீடு

பொழிற்றொண்டர்:
திரு அரங்க வே. சுப்பிரமணியன், பி. ஏ.,

# தமிழ்ப் பொழில்

துணர் : ருரு உள்ளுறை மலர் : சு

Contents

பக்கம்

1 சாத்தனார் கண்ட கண்ணகி .... 195

புலவர் க. சுப்பிரமணியன் எம். ஏ.,

2 எழுத்தின் மேல்
எழுந்த எண்ணங்கள் .... 201

அரங்க. வே. சு

3 தமிழேயாக மலர்ந்தோங்குக .... 202

முனைவர் சாலை இளந்திரையன்
கரோல்பாக், புதிய தில்லி-5.

4 ஒரு பறவைப் பார்வையில் ....
ஆய்வுத் தலைப்பு .... 207

சி. கோ தெய்வநாயகம்
கரந்தைத் தமிழ்ச் சங்கம், தஞ்சாவூர்.

5 காஞ்சிப் பாட்டு .... 210

K. சோமசுந்தரம் பி. ஏ; பி. எல்;
தஞ்சாவூர்.

6 கீழ்க்கணக்கில் சில புதிய
தொழிற் பெயர் வடிவங்கள் .... 217

முனைவர் ஆதித்தன்
மதுரைக் காமராசர் பல்கலைக் கழகம்.

7 எழுத்துச் சீர் திருத்தம் பற்றி
ஒரு விளக்கம் .... 218

பண்டித புலவர்
வை. தங்கமணி எம். ஏ; எம். ஃபில்;
தமிழாசிரியர்,
பி. கே. என். ஆண்கள் மேல்நிலைப்பள்ளி,
திருமங்கலம், மதுரை மாவட்டம்.

# தமிழ்ப் பொழில்

கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு

| துணர் ருரு | திருவள்ளுவர் யாண்டு உயகஉ<br>துன்மதி—மார்கழி<br>1981 டிசம்பர்—சனவரி | மலர் க |
|---|---|---|


தமிழ் வாழ்க

## சாத்தனார் கண்ட கண்ணகி


புலவர் க. சுப்பிரமணியன் எம். ஏ;


தண்டமிழ் ஆசான் கேட்க இளங்கோ சிலம்பை இயற்றியது போலவே இளங்கோ கேட்டருளச் சாத்தனாரும் மணிமேகலையை இயற்றினார். இரண்டு காப்பியங்களும் முப்பது காதைகளைக் கொண்டு விளங்குவது இருபெரும் புலவர்க்குமுள்ள ஒற்றுமையை நன்கு எடுத்துக் காட்டுகிறது. தன் காப்பியத் தலைவியாகிய மணிமேகலையின் தாயாகக் கண்ணகியைச் சிறப்பித்ததின் வாயிலாகச் சாத்தனார் கண்ணகி மீது தமக்குள்ள பக்தியை வெளிப்படுத்துகிறார். சாத்தனார் கவிக் கூற்றாகவும் பாத்திரங்களை நேரடியாகப் பேசச் செய்வதன் வாயிலாகவும் தம் கருத்தை நன்கு புலப்படுத்துகிறார்.

காவிரிப்பூம் பட்டினத்தில் இந்திர விழா நடைபெற்றது. அவ்விழாவில் மாதவியும், மணிமேகலையும் வழக்கப்படி ஆடுவதற்கு வர மறுத்தமையால் சித்திராபதி மிக வருந்தினாள். அவள் மாதவியின் தோழியாகிய வயந்தமாலையை அழைத்து மாதவி மீதும் மணிமேகலை மீதும் மாநகர் கூறும் அலரை மாதவிக்குக் கூறுமாறு வேண்டினாள். வயந்தமாலையும் மாதவியின் துறவுக் கோலத்துக்காக வாடினவளாதலின் மாதவியிடம் சென்று பலரும் கூடிக் கூறும் நலமில்லாத வாய்மொழி இனிதாதல் இல்லை; அதனால் நின் செய்கை நாணுந்தன்மையுடைத்தாம்'' என்று கூறினாள். அதனைக் கேட்ட மாதவி, கணவன் கொலை செய்யப்பட்ட கொடுந்துயர் பொறுக்கமாட்டாமல் பாண்டியன் பேரூராகிய மதுரையை மிகுந்த நெருப்பினால் அழித்த மிகச் சிறந்த தெய்வக் கற்பினையுடைய கண்ணகியின்

மகளாகிய மணிமேகலை அருமையான தவ நெறியிலேயே சேர்க்கப்படுவாள்; இழிந்த பரத்தையர் தொழில் சேர்க்கப்படாள் என்று பதில் கூறினாள்.

''காவலன் பேரூர் கணையெரி யூட்டிய
மாபெரும் பத்தினி மகள்மணி மேகலை
அருந்தவப் படுத்தல் அல்லது யாவும்
திருந்தாச் செய்கைத் தீத்தொழிற் படாஅள்''
(ஊர் அலர் உரைத்த காதை : 54-57)

மாதவி கண்ணகியை மாபெரும் பத்தினி என்று போற்றுகிறாள். தான் பெற்ற மகளைக் கண்ணகி மகள் என்று கூறுவதில் பெருமிதம் காண்கிறாள். மாதவியின் புகழுரை மிகையன்று என்பதற்குச் சிலப்பதிகாரமும் சான்றாகும். சேரன் எடுத்த கண்ணகியின் கோயிலுக்குச் சென்று வழிபடும் போது அவளுடைய செவிலித் தாயாகிய காவற்பெண்டு என்பாள் கண்ணகியின் பெருந்தன்மையை நினைத்து உருகினாளாம். கோவலன் தன்னைப் பிரிதற்குக் காரணமாகிய மாதவி மீது கண்ணகிக்குச் சிறிதும் சினம் தோன்றாமையே அவள் உருக்கத்திற்குக் காரணமாகும்.

''மடம்படு சாயலாள் மாதவி தன்னைக்
கடம்படாள் காதல் கணவன் கைப்பற்றிக்
குடம்புகாக் கூவல் கொடுங்கானம் போந்த
தடம்பெரும் கண்ணிக்குத் தாயர் நான்''
(சிலம்பு. வாழ்த்துக் காதை: 3)

கோவலன் மாதவியை நீங்கிக் கண்ணகி மனைப் புகுந்தபோது வாடிய தோற்றத்தோடு இருந்தான். தன் தகாத செயலால் நேர்ந்த இலம்பாடு வெட்கம் தருவதாக இருக்கிறது என்றான். அதுகேட்ட கண்ணகி மாதவிக்குக் கொடுக்கும் பொருள் குறைபட்டதால் இவ்வாறு கூறினான் எனக் கருதிப் புன்முறுவல் காட்டிச் ''சிலம்புள கொண்மின்'' என்று பதில் கூறியதாக இளங்கோவடிகள் கூறுவதிலிருந்தும் மாதவி மீது கண்ணகிக்குச் சிறிதும் காழ்ப்பில்லை என்பதை அறியலாம். மாதவி வயந்தமாலைக்குக் கூறிய உரையின் வாயிலாக மணிமேகலைக்கு வினை பயன்தரத் தொடங்கியது. மணிமேகலை தன் தந்தைக்கும், தாயாகிய கண்ணகிக்கும் மதுரையில் நேர்ந்த கொடுந்துன்பம் தன் காதுகளைச் சுட்டதால் அழுத கண்ணீரால் தான் தொடுத்த மாலையை நனைத்தாள் என்று குறிப்பிடும்போது கவிக்கூற்றாகச் சாத்தனார் கண்ணகியை மணிமேகலையின் தாய் என்று கூறுகிறார்.

''தந்தையும் தாயும் தாநனி யுழந்த
வெந்துய ரிடும்பை செவியகம் வெதுப்பக்
காதல் நெஞ்சம் கலங்கிக் காரிகை
மாதர் செங்கண் வரிவனப் பழித்துப்
புலம்பு நீர் உருட்டிப் பொதியவிழ் நறுமலர்
இலங்கிதழ் மாலையை இட்டு நீராட்ட''

(மலர்வனம் புக்க காதை: 5-10)

மணிமேகலா தெய்வத்தால் மணிபல்லவத் தீவு சேர்க்கப்பட்ட மணிமேகலை அங்கு யாரும் இல்லாதது அறிந்து குழல் அவிழ்ந்து பின்னே விழக் கூவிப் புலம்பி ஏங்கி அழுது ஆழ்ந்த துன்பத்தில் அழுந்தினாள். தன் தந்தையாகிய கோவலனை நினைந்தாள். தீவினை வந்து உருப்ப அன்னை கண்ணகியோடு வேறுநாடு சென்று வாளால் வெட்டுண்டு வருந்தி ஐயாவோ! என்று கலங்கிக் கூறினாளாம்.

''தாழ்துயர் உறுவோள் தந்தையை உள்ளி
எம்மிற் படுத்தும் வெவ்வினை உருப்பக்
கொற்றொடி மாதரோடு வேற்றுநாடு அடைந்து
வைவாள் உழந்த மணிப்பூண் அகலத்து
ஐயாவோ என்று அழுவோள் முன்னர்''

(மணிபல்லவத்துத் துயர் உற்ற காதை: 39-43)

உதயகுமரன் கொலையுண்டதால் சிறைசெய்யப் பெற்ற மணிமேகலை சிறையிலிருந்து விடுதலை செய்யப்பெற்றாள். அப்போது இராசமாதேவி சித்திராபதி, அறவணவடிகள் மாதவி ஆகியோர் அங்கு இருந்தனர். அறவணவடிகள் அறவுரை கேட்ட மணிமேகலை அவரை வணங்கினாள். அனைவரும் அடிகள் அறவுரைப்படி நடக்க வேண்டினாள். தான் அங்கிருந்தால் உதயகுமரன் கொலைக்குத் தானே காரணம் என்று ஊரார் பழி கூறுவர்; ஆகையால் ஆபுத்திரன் நாட்டிற்கும் மணிபல்லவத் தீவிற்கும் செல்வேன். அதன் பிறகு வஞ்சி மாநகரம் சென்று மாபத்தினியாகிய கண்ணகியின் பொருட்டுக் குறைவில்லாத நல்லறத்தை ஆற்றுவேன்; எனக்குத் துன்பம் உண்டாகும் என்று கலங்க வேண்டாம் என்று அனைவரையும் வேண்டினாளாம்.

''வஞ்சியுட் புக்கு மாபத்தினி தனக்கு
எஞ்சா நல்லறம் யாங்கணும் செய்குவல்
எனக்கு இடர் உண்டென்று இரங்கல் வேண்டா''

(ஆபுத்திரனாடு அடைந்த காதை: 155-157)

மணிமேகலை வஞ்சி நகரத்தையடைந்து குறையாத அன்புடைய அன்னை கண்ணகியையும், கொடையில் சிறந்த தந்தை கோவலனையும் தெய்வமாக எழுதி அமைக்கப்பட்ட கோவில் சென்றாள். கண்ணகியின் பண்புகளை எடுத்துக் கூறி வணங்கினாள். கணவன் இறந்ததும், தீப்பாயாமலும், கைம்மை நோன்பு மேற்கொள்ளாமலும், மறக்கற்பினை மேற்கொண்டு கடனாற்றிய காரணத்தைத் தனக்கு உரைத்தருள வேண்டும் என்று கூறி மணிமேகலை அழுதவண்ணம் கண்ணகி திருமுன் நின்றாள்.

''தணியாக் காதல் தாய் கண்ணகியையும்
கொடை கெழுதாதை கோவலன் தன்னையும்
கடவுள் எழுதிய படிமம் காணிய
வேட்கை துரப்பக் கோட்டம் புகுந்து
வணங்கி நின்று குணம் பல ஏத்தி
அற்புக் கடன் நில்லாது நற்றவம் படராது
கற்புக் கடன் பூண்டு நுங்கடன் முடிந்தது
அருளல் வேண்டும் என்று அழுது முன் நிற்ப''

(வஞ்சி மாநகர் புக்க காதை: 2-9)

மணிமேகலையின் வேண்டுகோளைக் கேட்ட ஒப்பற்ற பெருமையினையுற்ற பத்தினிக் கடவுளாகிய கண்ணகி அவளுக்குத் தன் வரலாறு கூறினாள்.

முற்பிறப்பில் என் கணவனாக இருந்த பரதன் நீலியின் கணவனாகிய சங்கமனை அநியாயமாகக் கொன்றதால் நீலி இட்ட சாபமே நான் துயர்படக் காரணமாகும். நான் மதுரையை எரித்தபோது மதுராபதி தெய்வம் எனக்கு இவ்வரலாறு கூறியது. மதுரையைத் தீயிட்ட பாவத்தால் நான் பன்முறை பிறந்து இறப்பேன். இறுதியில் கவில நகரடைந்து தவம் பூண்டு புத்தன் அறம் உரைக்கும்போது பிறவி நீங்கிய தன்மை பெறுவேன். மணிமேகலையே நீயும் இறுதியில் புத்தன் ஆகமங்களின் வழியைக் கடவாமல் அதனை மேற்கொள்வாய். உனக்கு இனி நிகழப் போவது இதுவே என்று மணிமேகலையின் தாய் ஆகிய தனக்கு நேர்ந்தவற்றையும், தன்மகளுக்கு நேர இருப்பதையும் கண்ணகி கூறியதாகச் சாத்தனார் விவரிக்கின்றார்;

''ஒரு பெரும் பத்தினிக் கடவுள் ஆங்கு உரைப்போள் (10)

பைந்தொடி தந்தையுடனே (54)

பிறவி நீத்த பெற்றிய மாகுவம் (59)
நறைகமழ் கூந்தல் நங்கை நீயும் (62)
முறைமையின் இந்த மூதூ ரகத்தே
அன்னவர் சமயத்து அறிபொருள் கேட்டு
மெய்வகை யின்னும் நினக்கே விளங்கிய
பின்னர்ப் பெரியோன் பிடகநெறி கடவாய்
இன்னது இவ்வியல்பெனத் தாய் எடுத்துரைத்தலும்''
(வஞ்சி மாநகர் புக்க காதை: 63-67)

சமயக் கணக்கர் திறம் கேட்ட மணிமேகலை வஞ்சியில் தவம் மேற்கொண்டிருந்த தன் பாட்டனார் மாசாத்துவானைக் கண்டு வணங்கித் தன் வரலாறு கூறினாள். தன் பேத்தியின் தூய்மை கண்டு மகிழ்ந்த மாசாத்துவான், மணிமேகலையின் தந்தை கோவலனும் தாய் கண்ணகியும் பழவினைப் பயனால் மதுரை தீக்கிரையாகி அழியுமாறு துன்புற்று இறந்தமையே தன் துறவுக்குக் காரணம் என்று பதில் கூறினான். மணிமேகலையின் தாய் கண்ணகியென்று மாசாத்துவானைக் கூறச் செய்த தன் வாயிலாக ஆசிரியர் கண்ணகிமீது தனக்குள்ள பக்தியை வெளிப்படுத்துகிறார்.

''...... ...... தூயோய் நின்னையென்
நல்வினைப் பயன்கொல் நான் கண்டது எனத்
தையல் கேள் நின் தாதையும் தாயும்
செய்த தீவினையில் செழுநகர் கேடுறத்
துன்புற விளிந்தமை கேட்டுச் சுகதன்
அன்புகொள் அறத்திற்கு அருகனேன் ஆதலின்
மனைத்திற வாழ்க்கையை மாயமென் றுணர்ந்து
தினைத்தனை யாயினும் செல்வமும் யாக்கையும்
நிலையா வென்றே நிலைபெற வுணர்ந்தே
மலையா அறத்தின் மாதவம் புரிந்தேன்
(கச்சிமாநகர் புக்க காதை: 91-100)

மேலும் கண்ணகியும் கோவலனும் கபிலைப் பகுதியில் வீடுபேறு எய்துவர் என்பதை அறிந்தோர் கூறக் கேட்டதாக மாசாத்துவான் மணிமேகலையிடம் கூறினான்.

''பூங்கொடி முன்னவன் போதியில் நல்லறம்
தாங்கிய தவத்தால் தான் தவம் தாங்கிக்
காதலி தன்னோடு கபிலையம் பதியில்
நாதன் நல்லறம் கேட்டு வீடெய்துமென்று

அற்புதக் கிளவி அறிந்தோர் கூறச்
சொற்பயன் உணர்ந்தேன் தோகை யானும்''

(கச்சி மாநகர் புக்க காதை: 141-146)

**மா**தவி தகாத குல ஒழுக்கத்தை மேற்கொள்ள மாட்டேன் என்று குலப்புரட்சி செய்தாள். கண்ணகி **அநீதி** இழைத்த அரசாட்சியை அழித்து நீதியை நிலைநிறுத்த மறப்புரட்சி செய்தாள். மணிமேகலை பசிப்பிணி நீக்கும் அறப்புரட்சி செய்தாள். இம் மூவர் சிறப்பியல்புகளை இரண்டு காப்பியங்களும் எடுத்தியம்புகின்றன. எனினும், கண்ணகியைப் பலவாறு புகழ்ந்த சாத்தனார் அவள் மதுரையை எரித்தது குற்றம் என்றும் அவ்வாறு செய்தமையால் தொடர்கின்ற பிறவிப்பிணி கபிலையில் புத்தன் அறிவுரை கேட்ட பிறகு நீங்கும் என்றும் கூறியுள்ளார். தாம் தழுவிய புத்தமதக் கொள்கையைக் கண்ணகி மீதேற்றிக் கூறுவதற்குக் காரணம் சாத்தனாரின் அளவற்ற மதப்பற்றேயாகும். ''கலைஞன் தன் திடீர் விருப்பம், தனிப்போக்கு, முற்கோள், ஒருதலைச் சார்பு ஆகியவற்றைத் தன் கலைப்பணியில் வெளியிடுகிறான்.''* என்று அறிஞர் பென்சான்சன் கூறுவது மணிமேகலை ஆசிரியருக்கு மிகப் பொருந்துவதாகும்.

---

*''The creative artist gives expression to his whim-whams, eccentricities, prejudices and predilections in his works of arts.''

—Practical Criticism: Page-3.



★ வரலாற்றுக் காப்பியம் ★

(முதற் பகுதி)

# சங்க காலம்

எழுத்து — ஏ. கே. வேலன்.

**எழுத்தின் மேல் எழுந்த எண்ணங்கள்**

**—அரங்க. வே. சு**

உன்னை நீயறிய உலக முனைத்தெரிய
வரலாற்றின் படிக்கட்டில் வளருமொரு காப்பியம்,
நீளும் நிலப்பரப்பு நீர்ப்பரப்பு ஆனதும்,
நீர்ப்பரப்பு கீழாக நில்ப்பரப்பு உயர்ந்ததும்,
அவதாரம் பத்தும் உயிர்க்குலத்தின் சுற்றொன்றாம்,
அறிவின் எழுச்சியும், ஆணவத்தின் அழிவும்,
ஆறாவது அறிவாக எழுந்தவொரு கட்புலனும்,
நானிலம் புகழ, நானிலம் வகுத்ததும்,
எழுத்தும், சொல்லும், பொருளும் கொடுத்ததும்,
மேலும் கீழும் கணக்குகள் கணித்ததும்
வாள் சிறந்ததும், யாழ் பிறந்ததும்,
காதல் அரும்பியதும், கவிதை மலர்ந்ததும்,
அறம்பொருள் இன்பத்தி லாழ்ந்து தெளிந்ததும்,
நயத்தக்க நாகரிகம் தமிழினம் கண்டதும்
எழிற்கன்னி யொருத்தி இருகையி லேந்தும்
வண்ணங்கள் காட்டும் வனப்பு முகப்புடன்
அன்னை தமிழுக்கு அமைத்ததொரு ஆலயம்,
சிற்பி வேலனின் சிறந்த சிந்தனைகள்.
பயின்று பயன் பெறலாம்.

விலை: ரூ. **4—00**

கிடைக்குமிடம் :

**V. S. K. வெளியீடு,**
அருணாசலம் ஸ்டுடியோ,
சென்னை - 600 092.

## தமிழேயாக மலர்ந்தோங்குக,

## நம்முடைய தமிழ்ப் பல்கலைக் கழகம்!

—: வல்லுநர் குழு உறுப்பினர் :—

முனைவர் **சாலைஇளந்திரையன்** அவர்கள்

# கோரிக்கை

கடந்த 40/50 ஆண்டுகளாக நம்முடைய தமிழ் மொழி, தமிழ் இலக்கியம், தமிழ் வரலாறு, தமிழ்ப் பண்பாடு ஆகியவைகளை உலகுக்கெல்லாம் எடுத்து உணர்த்த வேண்டும் என்ற ஆர்வம் நம்மிடம் மிகுதியாக உண்டாகியுள்ளது. இந்த ஆர்வத்திற்குச் செயற்களம் அமைக்கும் விதமாக, உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம் ஒன்றை அமைத்திருக்கிறோம். உலகத் தமிழ் மாநாடுகளையும் நடத்தி வருகிறோம். 1981 செப்டம்பரில் தஞ்சையில் உருவான தமிழ்ப் பல்கலைக் கழகம், இப்போது இந்த வரிசையில் சேர்ந்திருக்கிறது.

### எச்சரிக்கை ஏன்?

தமிழில் உள்ள கலைகள், வரலாறுகள், தொழிலியல்கள், பழம் அறிவியல்கள் அனைத்தையும் விரிவாக ஆராய்வதே தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் அடிப்படை நோக்கம். இப்படி ஆராய்ந்து துலக்கப்படும் தமிழ்ச் செல்வங்களை உலக அறிஞர்களின் கவனத்துக்குக் கொண்டுவரும் விதமாக, தமிழரல்லாத அறிஞர்கள் சிலரை இதிலே ஈடுபடுத்துவதற்கும் வாய்ப்பு உள்ளது. இந்த வாய்ப்பு உரிமையைப் பெரிதுபடுத்தி, தமிழ்ப் பல்கலைக் கழகத்தையே அயல்நாட்டுப் பிறமொழி அறிஞர்களின் தங்குமடமாகவும் அவர்களின் தழைப்பிடமாகவும் ஆக்கிவிடக்கூடிய ஆபத்து ஒன்று இருப்பதால், — இதைக் குறித்துத், தமிழகத் தமிழர்களையும் அயல் நாடுகளில் வாழும் தமிழ் நல்லோர்களையும் இப்போதே எச்சரிக்க வேண்டியுள்ளது.

'நல்ல காரியம் ஒன்றைப் பெரிதாகத் தொடங்கும்போது இப்படிப் பட்ட ஓர் எச்சரிக்கைக் குரலை எழுப்ப வேண்டியது அவசியமா?' என்றால்,—அப்படிப்பட்ட ஓர் அவசியம் இருக்கத்தான் செய்கிறது; நமது முந்திய அனுபவமும் இதையே உறுதி செய்கிறது. எந்தத் துறையிலும்,—எதையாவது பற்றிக் கொண்டு,—யாரை

யாவது பிடித்துக் கொண்டு முன்னுக்கு வந்துவிட வேண்டும் என்று பறக்கிற அரைகுறைகள் பலராக இருக்கிறார்கள். அவர்கள், தமிழைத் தடம்புரட்டி அந்நியர் கையிலே ஒப்படைத்து விட்டுக் கூடத், தங்களுக்குப் பெரிய நாற்காலி தேடிக் கொள்ள முந்துவார்கள். இப்படிப்பட்டவர்கள் தமிழ் படித்தவர்களிடை யேயும் காணப்படுவதால், ''தமிழ்ப் பல்கலைக் கழகம் தமிழே யாக இருக்குமாறு கவனித்துக் கொள்ளுங்கள்'' என்று ஆர்வ முள்ள தமிழர்களை எச்சரிக்க வேண்டியது மிகமிக அவசியமாகி யுள்ளது.

## சமற்கிருதம் படும்பாடு!

இதை நினைக்கிறபோது, (அண்மையில் அக்டோபர் மூன்றாவது வாரத்தில்) காசி மாநகரில் நடைபெற்ற அய்ந்தாவது உலக சமற்கிருத மாநாடு நமது கவனத்தைக் கவருகிறது. அதைப் பற்றிச் சுற்றிக் காட்டப்படும் சில குறைகளைப் பார்த்தால், நம்முடையவர்கள், தங்கள் பாரம்பரியச் செல்வத்தை அந்நிய ரிடம் கையளிப்பதில் தயக்கமே காட்டமாட்டார்கள் என்று எண்ணி மிகமிகப் பயப்பட வேண்டியுள்ளது.

உலக சமற்கிருத மா நாட்டில் அமைக்கப்பட்ட கருத்தரங்குகள் எல்லாவற்றுக்கும் அயல்நாட்டு அறிஞர்களே தலைமை வகித் தார்கள்; இந்திய அறிஞர்கள் அவர்களுக்கு உதவியாளர்களாக மட்டுமே நியமிக்கப் பட்டிருந்தார்கள். பரம்பரை பரம்பரை யாகச் சமற்கிருதத்தின் பல துறைகளைப் படித்து ஆராய்ந்த இந்திய சமற்கிருதப் புலவோர்கள், பொதுக் கருத்தரங்குகளின் பக்கமே வரவிடப்படவில்லை. மதுரையில் நடைபெற்ற அய்ந்தா வது உலகத் தமிழ் மாநாட்டில் புறக்கணிக்கப்பட்ட அயலகத் தமிழர்களான தமிழ் அறிஞர்களுக்கு ஒரு தனிக் கருத்தரங்கு பிறகு ஒதுக்கப்பட்டது போலவே, இங்கே, இந்திய சமற்கிருதப் பெரும் புலவர்களுக்கு என்று ஒரு கருத்தரங்கைத் தனியே ஒதுக்கி விட்டார்கள்.

அத்தோடும் விடவில்லை; அமைச்சர்களின் வரவேற்பிலும் வேறு சிறப்பு நிகழ்ச்சிகளிலும் இந்த அறிஞர்களை அழைக்கவில்லை; அழைத்த இடங்களிலும், எல்லோரும் 'வெள்ளை' சமற்கிருத அறிஞர்களையே வரவேற்று அன்பளிப்புகளை வழங்கினார்கள்; இவர்களை யாரும் சீந்தவில்லை. நீங்களெல்லாம் ஏன் வந்தீர் கள்?' என்று கேட்பது போலவே, அங்கெல்லாம் பதவியாளர்கள் நடந்து கொண்டார்கள்.

இவை யாவற்றுக்கும் உச்சம் என்னவென்றால்,—இந்த அய்ந்தாவது உலக சமற்கிருத மாநாட்டுக்குத் தலைமை வகித்த அறிஞர் சமற்கிருதத்தில் ஒரே ஒரு வாக்கியம்கூடப் பேசவில்லை; ஆங்கிலத்திலேயே அனைத்தையும் நிகழ்த்தி முடித்துவிட்டார். அண்டையில் அமர்ந்திருந்த காசிப் பல்கலைக் கழகப் பேராசிரியர் ஒருவர், ''அய்யா, சமற்கிருதத்திலும் சிறிது பேசுங்கள்'' என்று தலைவரைக் கேட்டுக் கொண்டபோது, அங்கு நின்று கொண்டிருந்த ஒரு போலீசுக்காரரே, ''நீங்கள் சும்மா உட்காருங்கள்'' என்று கட்டளையிட்டு விட்டார். (இந்த நிகழ்ச்சி உத்தரப் பிரதேச முதலமைச்சரின் முன்னிலையிலேயே நடந்திருக்கிறது.)

இப்படியாக,—அயல்நாட்டு அறிஞர்களுக்காகவே, அயல்நாட்டு அறிஞர்களின் தலைமைகளிலேயே, அயல் (ஆங்கில) மொழியிலேயே நடத்தி முடிக்கப்பட்டது, காசி மாநகரில் நடந்த அய்ந்தாவது உலக சமற்கிருத மாநாடு!

## நம் நிலை என்ன ?

நாமும் கடந்த 15 ஆண்டுகளில் அய்ந்து உலகத் தமிழ் மாநாடுகளை நடத்தியுள்ளோம்; அவைகளிலே இரண்டு மாநாடுகள் தமிழகத்திலேயே நடந்துள்ளன. அவைகளிலே ஏற்பட்டுத் தெரிந்த அயல்நாட்டு மோகத்தை நினைக்கும்போது, தமிழ்ப் பல்கலைக் கழகத்திலும் அந்த நோய் புகுந்துவிடக் கூடாதே என்று பதறவே வேண்டியுள்ளது.

1968-இல் சென்னையில் நடைபெற்ற இரண்டாவது உலகத் தமிழ் மாநாட்டு ஆராய்ச்சிப் பகுதியில் இந்தியாவிலும் தமிழகத்திலும் உள்ள தமிழர்களான பல தமிழ் அறிஞர்கள் அடியோடு புறக்கணிக்கப் பட்டார்கள். இவர்களெல்லாம் மரபுவழிப் புலவர்களல்லர்; அனைவரும் எம். ஏ , எம். லிட் , அல்லது எம். ஏ., பிஎச். டி., பட்டங்கள் பெற்ற தமிழறிஞர்கள்.

குதிரை கீழே தள்ளியதோடும் விடவில்லை; குழியும் பறித்தது. ஆமாம்; தெ. பொ மீ., சி. இலக்குவனார், வ. சுப. மாணிக்கம் ஆகியோரையும் இந்தியாவின் 13 பல்கலைக் கழகங்களைச் சேர்ந்த தமிழ்ப் பேராசிரியர்களையும் ஒதுக்கியதோடு விடவில்லை அமைப்பாளர்கள்; தமிழகத் தமிழ் அறிஞர்களிடமிருந்து வந்துள்ள பல ஆய்வுரைகள் உலக ஆராய்ச்சித் தரத்தை எட்டவில்லை'' என்று ஒரு சுற்றறிக்கையையும் ஆங்கிலத்திலே வெளியிட்டுப் பரப்பினார்கள்!

இந்தப் புறக்கணிப்பின் காரணமாகவும் அவமதிப்பின் காரண மாகவும் இந்தியாவின் 16 பல்கலைக் கழகங்களைச் சேர்ந்த தமிழ் அறிஞர்கள் ஒன்று கூடி, அங்கேயே இந்தியப் பல்கலைக் கழகத் தமிழாசிரியர் மன்றத்தை (சென்னை-1968) உருவாக்கி னார்கள். இந்த மன்றம், இதுவரை, பன்னிரண்டு அகில இந்தியத் தமிழ் ஆராய்ச்சிக் கருத்தரங்கு மாநாடுகளை நடத்தி யுள்ளது. இந்தக் கருத்தரங்குகளில் நடந்த ஆய்வுகளில் பெரும் பகுதி, உலக ஆராய்ச்சித் தளத்துக்கு உயர்ந்து தமிழ் ஆராய்ச் சிக்கே சிறப்புச் சேர்த்துள்ளது.

இதே போன்ற தமிழ்த்தமிழர் புறக்கணிப்பு, 1981 மதுரை மாநாட்டில் சற்று வேறுவிதமாக நடந்தது; தமிழக, இந்தியத் தமிழர்களை ஓரளவில் அரவணைத்துக் கொண்ட மாநாட்டு நடத்துக் குழுவினர், ஈழம், மலேசியா, தென்னாப்பிரிக்கா முதலான நாடுகளின் தமிழர்களான அறிஞர்களை மொத்தமாகப் புறக்கணித்தார்கள். அதன் காரணமாகவே,—சிலபேர் எழுந்து குரல் கொடுத்ததன் விளைவாக,—புறக்கணிக்கப்பட்டவர்களுக்கு என்று பிறகு தனியே ஒரு கருத்தரங்கு அமைக்கப்பட்டது.

யாழ்ப்பாணத்து (நாலாவது) தமிழ் மாநாடு தவிர மற்றெல்லா மாநாடுகளிலும், மாநாட்டின் பெரும்பகுதி ஆங்கிலத்திலேயே நடத்தப்பட்டது. சென்னையிலும் மதுரையிதும் கூட இந்த நடைமுறை பரவி, அங்கு வந்திருந்த அயலகத் தமிழர்கள், 'தமிழ் மாநாட்டில் ஆங்கிலம் ஏன்?' என்று குரல் எழுப்ப வேண்டிய நிலை உருவாயிற்று.

## தமிழாய் மலர்ந்திட..

இவைகளை நினைவுக்குக் கொண்டுவந்து பார்க்கிறபோது, நமது தமிழ்ப் பல்கலைக் கழகமும், (ஆராய்ச்சித் தரம் என்பதன் பேரால்) இப்படிப்பட்ட அயல் நாட்டார் மோகத்துக்கு உட்பட்டு உருக் குலைந்து விடக்கூடாதே என்ற பரிதவிப்புச் சிறிது அதிகமாகவே ஏற்படுகிறது. மாநாடு என்பது நான்கைந்து நாள் கூடி இருந்து பேசிப்பிரியும் விவகாரம் பல்கலைக் கழகம் அப்படி அல்ல;— இது நிரந்தரமாக இருக்கப்போகிற நிறுவனம். இதிலே தமிழ் மயம் என்ற கொள்கை குழம்பி, துறைகளின் தலைமையிலும் ஆராய்ச்சிகளின் மேல் அரங்குகளிலும் தமிழரல்லாத பிறமொழி யாளர்களே ஏறி அமர அனுமதித்து விட்டால் தமிழ்ப் பல்கலைக் கழகம் தமிழர்கள் வெறுக்க வேண்டிய இடமாகி விடும். இந்த நெடுந்தீங்கு தமிழ்ப் பல்கலைக் கழகத்துக்கு ஏற்பட்டு விடாதபடி உலகெங்கும் உள்ள தமிழ்ப் பொதுமக்கள் இப்போதே கண் காணித்து வரவேண்டும்.

உலகெங்கும் உள்ள தமிழர்கள் புதியதோர் எழுச்சியுடன் தாய்த் தமிழகத்தை எதிர்பார்த்து-எதிர் நோக்கி இருக்கிற சமயத்தில் தமிழ்ப் பல்கலைக் கழகம் அமைகிறது. தமிழின் பேரால் ஏற்கனவே நடைபெற்றுவிட்ட தவறுகள் களையப்பட்டு, உலக அளவில் தமிழர்கள் ஒருங்கு இணைக்கப்பட வேண்டும் என்று உலகின் பிறநாடுகளில் வாழும் தமிழர்கள் பெரிய ஆர்வத்தோடு விரும்புகிறார்கள் இந்தச் சமயத்தில் தமிழ்ப் பல்கலைக் கழக உருவாக்கம், மிகுந்த நிதானத்தோடும் சீரிய தமிழ் உணர்வோடும் நடத்தப்பட வேண்டும். ஆராய்ச்சிப் பட்டங்கள் இல்லை என்பதாலோ கருத்தரங்குகளுக்குச் செல்லவில்லை என்பதாலோ சிற்பம், சித்திரம், இசை, நாடகம் போன்ற துறைகளில் மரபுவழிப் பயிற்சியும் சிறந்த தேர்ச்சியும்உடைய தமிழர்களைப் புறக்கணித்து விடக் கூடாது; அப்படிச் சில பட்டங்கள் பெற்றவர்கள் என்பதற்காக அயலவர்களைத் தலைமைப் பதவிகளில் நியமிக்கக்கூடாது. சுருக்கமாகச் சொன்னால் தொடக்க நிலையில், தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் எல்லாத் துறைகளிலும் (தமிழகம் அல்லது பிற நாடுகளைச் சேர்ந்த) தமிழர்களே தலைவர்களாக நியமிக்கப்பட வேண்டும். தேவையான இடங்களில், உள்நாட்டு / பிற நாட்டுப் பிறமொழி அறிஞர்கள் ஆலோசகர்களாக மட்டுமே நியமிக்கப்பட வேண்டும் தமிழ்ப் பல்கலைக் கழகத்திற்கு ஒரு தமிழ்த்தோற்றம் ஏற்படுவதற்கு இந்தக் கட்டுப்பாடு மிகமிக அவசியம்.

''படித்தவர்கள் இருக்கிறார்கள், — அவர்கள் இதை எல்லாம் பார்த்துக் கொள்வார்கள்'' என்று எதையும் விட்டுவிட முடியவில்லை. காரணம், அவர்களிலே பலபேர், குறுகிய சுயநலக் காரர்களாக இருக்கிறார்கள்; தங்கள் பொதுச் செல்வங்களான மொழி, கலை, பண்பாடுகள் ஊறுபடுத்தப்படுவதைப் பற்றி அவர்கள் அக்கறை காட்டவில்லை. பக்தர்கள்தானே நமது கோயிற்சிலைகளைத் திருடி அந்நிய நாட்டிலே விற்கிறார்கள்! எனவே, தமிழ்ப் பெருமக்கள் விழிப்பாக இருந்து, நமது இனிய தமிழ்ப் பல்கலைக் கழகம் தமிழேயாக மலர்ந்தோங்கிடச் செய்ய வேண்டும்.

★ ★ ★

ஒரு பறவைப்
பார்வையில் ... ...

# 3. ஆய்வுத் தலைப்பு

—சி. கோ. தெய்வநாயகம்

"எண்சாண் உடம்பிற்குத் தலையே பிரதானம்" என்பது முதுமொழி. ஆய்வெனும் உடலிற்குத் தலையாவது தலைப்பே. தலைப்பின் சிறப்பைப் பொருத்தே ஆய்வுரை மதிப்புப் பெறும். அஃது ஆய்வேட்டின் இன்றியமையாமை அல்லது சிறப்பினைத் தெற்றென விளக்கிடுவதாக அமைதல் நலம். சுருங்கச் சொல்லி விளங்க வைக்கும் தகைமையதாதல் சிறப்புடைத்து.

அத்தகு தலைப்பினைத் தேர்ந்தெடுத்து ஆய்வுரைக்குக் கொடுப்பது என்பது ஆய்வின் முடிபாகும். பெரும்பாலும் பட்டங்கருதி எழுதப்படும் ஆய்வுரைகட்கு இவ்வமைப்பு இருப்பதில்லை. ஆய்வு செய்வதற்கு முன்னர்க் கொண்ட கருதுகோளுக்குத் தகவே தலைப்பினைப் பதிவு செய்து கொண்டு ஆய முற்படுகின்ற நிலையே இன்று ஏராளம். இந்நிலையில் கருதுகோளின் இயல்பிற்கேற்பச் சிறப்பாகவோ சிறப்பின்றியோ "குருட்டுப் பூனை விட்டத்தில் தாவியது போலத்" தலைப்பு அமைந்து சிறுமையோ பெருமையோ பெற்றுவிடுகிறது. ஆதலின் ஆய்வேட்டுத் தலைப்பைச் சிந்தித்து, ஆய்ந்து, தேர்ந்து. தெளிந்து பதிவு செய்யப் படுதற்குரியதாகின்றது. அவ்வியல்பினை ஆய்வர் கொள்ள வேண்டியது அவசியமாகிறது. அது குறித்தே இக்கருத்துக் கோர்வை எழுகின்றது.

"சுருக்கம்தான் அறிவின் ஆன்மா". அவ்வழி ஆய்வுப்புலம் அனைத்தும் சில சொற்களால் உணர்த்தப்படுமாறு அமைத்தல் ஆய்வனது அறிவுத் தெளிவினை சுட்டுவதாகும். தமதாய்வுபற்றி மிகத் துல்லியமான தெளிவினை ஒருவன் பெற்றிருக்கும்போதே தனது ஆய்வு பற்றிய மெய்ம்மையினைச் சில சொற்களால் சொல்ல முடிகிறது.

இத்தலைப்பின் தலைமையினைப் பிறிதோர் ஏதுவாலுங் காணலாகும். "பருப்பொருட்டாய பாயிரங் கேட்டார்க்கு நுண்

பொருட்டாய நூலினிது விளங்கும்'' என்பது மெய்ம்மை. எனவேதான் நூற்பொருளனைத்தையும் சுருக்கமாக எடுத்த எடுப்பிலேயே செப்பிடற்கென புறவுரை, தந்துரை, புனைந்துரை, பாயிரம் எனும் முகவுரை தோன்றிற்றென்ப..

இம்முகவுரைகளாலும் பல தொடர்களால் ஆய பல பத்திகளாக சில பக்க அளவிலேயே நூற்பொருளைச் சுருங்கச் சொல்ல முடிந்தது. இதனையும் சுருக்கிச் சில சொற்களால் நூலின் உட்கோள் அல்லது மெய்ம்மையினைச் செப்புதற்காகவே ''தலைப்புகள்'' தோன்றின எனலாம்.

இன்றியமையாமை நிறைந்த இத் தலைப்புகள் ஆய்வேடுகளைப் பொறுத்தவரை மிகுந்த நோக்கிற்குரித்து. அடுத்தது காட்டும் பளிங்குபோல் உள்ள தலைப்பு விமரிசனங்களுக்கு உரியதாகும். ஆதலின், தலைப்பினைத் தெரிந்தெடுப்பது ஆய்வனது ஆய்வுத் தெளிவினை வெளியிடுவதாக அமைந்து விடுகிறது.

முரண்பாடுகட்கு, முரண்கருத்துகட்கு இடமளிக்கும் வகையில் அமைந்திடும் தலைப்புகளைவிட பொதுப்பட அமைந்திடும் தலைப்புகளே ஆய்வேடுகளைப் பொறுத்தவரை மேற்கொள்ளத் தக்கவை என்பது ஆய்வியல் அறிமுகத்தார் கருத்து.

ஆய்வு முறைகளை (Methods) செப்பிடுவதாயும் தலைப்புகள் அமைவதுண்டு

''அகநானூற்றில் ஆய்வு'' எனுந் தலைப்பு பொதுத் தலைப்பாய் அமைகிறது.

''அகிலன் சிறுகதைகள் - ஒரு திறனாய்வு'' என்பது திறன் பற்றிய மதிப்பீட்டு நெறியினைப் புலப்படுத்துகிறது.

''சிந்தாமணியின் மொழிநடை'' இது மொழியாராய்ச்சி வகையினைத் தழுவியது.

''புறநானூற்றில் வரலாற்றுச் சான்றுகள்'' என்பதோ வரலாற்று ஆய்வு நெறியின் வழிப்பட்ட ஆய்வு என்பதனைப் புலப்படுத்துகின்றது.

இதுபோன்றே எல்லாத் தலைப்புகளும் ஆய்வேட்டு மெய்ம்மைகளை சுருக்கமாகச் செப்புவதோடு ஆய்வு நெறியினையும் வெளிப்படுத்துவனவாக அமைகின்றன.

''ஆய்வுக் களம் இதுதான்'' என்பதனையும் சில தலைப்புகள் தெரிவித்து நிற்கின்றன.

"மணியனின் நாவல்களில் பெண்" எனுந் தலைப்பு மணியனது அனைத்து நாவல்களிலும் உள்ள 'பெண்' பாத்திரப் படைப்பினை, ஆயப்படுகின்ற பொருள் இதுதான் என்ற வரையறையினை—ஆய்வுக் களத்தினை புலப்படுத்துவதாக அமைந்துளது.

"ஆய்பொருள் இதுதான்" என்பதனையும் சில தலைப்புகள் வெளியிடுகின்றன.

"கம்பராமாயணத்தில் அணிகள்" "சிலப்பதிகார யாப்பமைதி" முதலிய தலைப்புகள் இவற்றை விளக்குவனவாயுள்ளன.

புதிய கண்டுபிடிப்புகள் புதிய விளக்கங்கள், புதிய கொள்கைகள் புதிய மெய்ம்மைகள் பற்றிய வெளிப்பாடுகளாகவும் தலைப்புகள் அமையலாம். ஆயின் அவை ஆய்வுப்பட்டம் பெறுதற்கு இடையீடு படுத்தாத அதாவது ஆய்வேடு தேர்ந்தெடுக்கைக் குழுவினர்க்குக் குழப்பமோ, முரண்பாடோ விளைவிக்காதனவாக, ஏற்புடையனவாய் அமைதல் சிறந்தது. ஆதலின், அவ்வழித் தலைப்புகளைப் பதிவு செய்தற்கு முன் உற்ற நண்பர்களோடு கலந்து முடிபு செய்தல் உண்டு.

தலைப்புகள் செம்பொருள் பயப்பனவாதல் வேண்டும். இருபொருட்படும் தலைப்புகள் இடும்பை தரற்கூடும். நேர்பொருள் தரத்தக்க தலைப்புகளைத் தேர்தல் நலம்.

ஆய்வும், ஆய்வின் தலைப்பும் புதியதுதானா? என்பதனை ஆய்ந்த பிறகே ஆய்வு தொடங்கப்பெறல் வேண்டும் இதற்கு முன் இதே தலைப்பில் பிற ஆய்வுகள் நிகழ்ந்திருப்பின் அம்முன்னாய்வுகளினின்றும் இவ்வாய்வு எத்திறத்தில் தனித்திறம் பெற்றது என்பதனை விளக்கும் வகையில் தலைப்பினைப் படைத்தல் வேண்டும்.

ஆய்வேடு தேர்ந்தெடுக்கைக் குழு முதற்கண் தலைப்பையே நோக்குகின்றது என்ற கருத்தினை மனதிற்கொண்டு "நல்ல தொடக்கமே நல்ல நிறைவினை அளிக்கிறது" (A good begining causes a good ending) எனும் முறையில் நல்ல தொடக்கமாக "First impression is the best Impression" எனும் வகைக்குத் தலைப்பினைத் தெரிந்தெடுத்தலே ஆய்வர் தகுதி பெறுதற்கு ஏதுவாகும். சுருங்கச் சொல்லின்,

"சில்வகை எழுத்திற் பல்வகைப் பொருளை
செவ்வ னாடியிற் செறிந்தினிது விளக்கி
திட்ப நுட்பஞ் சிறந்தன"

வாதல் தலைப்பின் சிறப்பு. அவ்வாறதனை அமைத்திடல் ஆய்வரின் திறம் என்றிடலாகும்.

# காஞ்சிப் பாட்டு*

K. சோமசுந்தரம் பி. ஏ., பி. எல்.,

## [4]

மதுரைக் காஞ்சிப் பாட்டினில் பேரின்பத்தைப்பற்றி இலக்கியச் சுவையில் அகயெழுச்சியோடு சிந்தையை இழுக்கும் வண்ணம் குறிப்பாகப் பயன்படும் வகையில் காட்டப்பட்டுள்ளதை ஆய்தலே அமைவுடைத்தாகும். இதன்கண் நிலையாமைக் குறிப்பு புலப்படுமாறு ஞானத்தைத் தழுவி விழுப்பம் பயக்கு மாற்றை உணர்த்தும் காஞ்சித் திணையினைப் பெரும்பாலும் விளங்கச் செய்தலே பாட்டிசைக்கும் மருதனாரது நோக்கமாகும். அதனாற்றான், செல்வ நுகர்ச்சிக்குரிய வாகைப் பகுதியை இப் பாட்டிடத்தே புலப்பட வைத்து, அதன் எல்லைக்கண் விளங்கும் நிலையாமைக் குறிப்பில் வீடுபேற்றிற்குரிய விழுப்பம் உணரும் வகையினை நுட்பமுற மருதனார் சிறப்பித்தருளியுள்ளார். இத னானே காஞ்சிப் பொருளின் விழுப்பத்தை யுணர்த்தும் இப்பாட்டு போர்த்திணை யடிப்படையில் அமைந்துள்ள காஞ்சித்துறை பாடாண்பாட்டாக ஒரோவழி கருதப்படும் ஈண்டு காஞ்சித் திணை போர்பற்றியதாயினும் போரினிலே ஏற்படும் அவலத்தை யும் அழிவையும் அதன் அடிப்படையில் எழும் வாழ்க்கை நிலை யாமையினையும்

''திரையிடு மணலினும் பலரே உரைசெல
மலர்தலை யுலகம் ஆண்டு கழிந்தோரே''
(ம. கா.: 236-237)

என குறிப்பாக, மாங்குடியார் கூறி, பாடாண்டிணைக்குரிய பேராவியற்கையினை யெய்தும் அருட்பேற்றின் செழுநிலையினை நன்கெடுத்துக் காட்டுவாராயினார்.

மாங்குடி மருதனார், பாண்டியனது நல்வினைப் பேற்றிற்காக மகிழ்ந்து அன்னாரை முன்னிலை மொழியில் புகழும் முறையான், உலகநிலையாமைவழி சிறந்தது பழகும் தெளிவுடையராக வயங்கி மேன்மேலும் வீறுடையராய் விளங்குமாறு விரும்பி, பாட்டின்கண் இயன்மொழி வாழ்த்து, செவியறிவுறூஉ, கொற்ற வள்ளை,

*துணர் 55, மலர் 8, பக்கம் 176-இன் தொடர் கட்டுரை.

''அரசியல் பிழையா தறநெறி காட்டிப்
பெரியோர் சென்ற அடிவழிப் பிழையாது
குடமுதல் தோன்றிய தொன்றுதொழு பிறையின்
வழிவழிச் சிறக்க நின்வலம்படு கொற்றம்''
(ம கா : 191-194)

ஆகிய குறிப்புகள் சிறப்பிடம் பெறுமாறு இப்பாட்டினை யாத்தருளி யுள்ளார். மன்னனது சிறப்பியல்பை வாழ்த்துடன் பயன்படப் புகழ்ந்து நுவலல் இயன்மொழி வாழ்த்து. அச்சிறப்பியல்பு நுவலுமாற்றால், பொதுவாக தீது செறுத்து நன்னெறிக்கண் நிறுத்தலாகிய செவியறிவுறூஉ, வாழ்விக்க வல்லதாகிய அற வுரைக் கண்ணதேயாகும் அருளறமுரைக்கும் இன்னுரை யெனும் மெய்யுரை விரவியது கொற்றவள்ளை யாகும். இப் பாட்டிற்கு இம்மூன்றும் அணி செய்து திகழ்வதினான், செவியார உணரற்கு, செந்தமிழுக்கு ஆக்கம் அளிக்கும் கவிதைப் பண் புடன், இப்பாட்டினை, தமிழணங்கு எழுதியதுபோல் உள்ளது. மற்றும் தொல்காப்பிய ஏழுதிணைப் பற்றிய போர்த்துறைகளை யும் அவைகளுக்குரிய பொருள்களையும் இப்பாட்டின்கண் விளங் கக் கூறி, அத்திணைகளுள்ளும், தேன் பிலிற்றும் சிறந்த காஞ் சித் திணையின் உட்பொருளினைப் பொருந்த வைத்து, புறத் திணைக்கே சிறந்த எடுத்துக் காட்டாக இப்பாட்டினுள் அமையத் தேக்கி செய்யுளின்பம் செறிய திகழச் செய்வது மருதனாரது மர பாகு மென்பது கண்டு கொள்க.

இத்தகைய குறிப்புகள் மூலம் போர்த்திணை பாடாண் பொரு ளொடு பயின்று வரும் பாண்டியனுக்கு அகவுணர்வு கிளந்து நுகர் தலுக்குரிய தெளிவு காணும் பொருட்டு அகம், புறம் எனும் கலை யியல் முறையில், அம்மன்னனது புறத்தறிவோடு அகத்தின் இனி மையும் கனிந்து எழுமாறு இழையச் செய்து, அன்னார் மெய் யுணர்வோடு மருவி வாழ, உறுதியும் பயனும் பயக்கும் வகையில் மருதனார், தனது புலமைக் கலைநலத்தால், அவரை உணர் வாட்சியின் அருளாட்சியில் தலைப்பட ஒளியராக்கி மிளிர வைத் தார். இவ்வாறு தாம் வேறு செழியன் வேறு என்ற துவிதநிலை யற்று, மருதனார் தம் வாய்மையும் தூய்மையும் எளிதே பெருமையுடன் புலனாகுமாறு மன்னனுக்கு கூறலுற்றதினான், அவரது உள்ளம் அருள்விளக்கத்திற்கு இடமாகி நிற்றல் தெற் றெனத் தெளியப்படும். இதனான் இவரது புலமையின் பயன் ஆகிய புலமைத் தொழிலின் மாட்சி சிறந்தொளிர்வது நன் குணர்ந்து கொள்ளப்படும். உலகிற்கு பயன்பட்டு விளங்கும் மாண்புடைய புலவர் தொழிலைப் பற்றி, பரிமேலழகர் திருக் குறளின் கல்வி அதிகாரத்தின்கண் வந்துள்ள 'புலவர் தொழில்' எனும் சொற்றொடர்க்கு 'தாம் நல்வழி யொழுகல் பிறர்க்குறுதி

கூறல் என்பன இரண்டும் ஒன்றாயடங்குதலின், அத்தன்மைத் தென்றார். அத்தன்மை அப்பயனைத் தருந்தன்மை. நல்லொழுக்கங் காண்டலானும், தமக்கு மதுரமு உறுதியுமாய கூற்றுக்கள் நிகழ்வெதிர்வுகளின் இன்பம் பயத்தலானும் கற்றார் மாட்டு எல்லாரும் அன்புடையராவர்' எனத் தன் அந்தண் உரையால் புலவர் தொழிலின் சிறப்புரிமையினைச் சாற்றுவது மகிழ்ச்சிக்குரியதாகும்.

மருதனார் காஞ்சிப் பொருளை உணர்த்த எடுத்த எடுப்பிலே, தம் பனுவலின்கண், ''ஓங்குதிரை வியன்பரப்பின் ஒலிமுந்நீர்'' என்ற சொற்றொடரின் மூலம், கட்பொறிக்கு அடங்காத இறைக் காட்சியை கடலில் கண்டு, முழங்கும் அலைகளிலே கலையினை உணரப் பெற்று கடலும் அதன்மீது ஓய்ந்தபாடிலாது தோன்றும் அலைகளும் ஒன்றேயென்ற முடிவுக்கு வரும்படி உணர்த்தியுள்ளார். அதனான் உண்மைத் தெளிவு ஞானமுற்று தெய்வீக இயற்கைக்கு வயப்பட்டு, மருதனார், ''என்று நீ அன்று நான்'' எனும் விழிப்பினை எய்தப் பெற்று இறையும் உயிரும் கடலும் அலையும் போன்று ஒன்றெனக் கொண்டு 'நான் யார்' எனும் தத்துவ ஆய்வில் இறைபால் 'நான், நீ' என்ற உறவு முறையால் அன்பு செய்யுங்காலை 'நீ' என்பது முறுகும்போது 'நான்' எனும் பொருள் உண்மையில் இலதென உணர வைத்தார். அதனான், மருதனார் ஆன்மாவினை இறைபால் ஒப்புவித்தல் சாலவும் மேம்பாடுடையது என விரும்பி ஏற்றுக் கொள்ளும் முறையினை அனுபூதியாகக் கொண்டார்.

தோன்றி அழிதலுமாகிய நிலையாமையினை, வீடுபேற்றின் நிமித்தமாகப் புலப்படுத்தும் கருத்துடையராய், மாங்குடி மருதனார், மூன்று நீர்மையுடைய கடல், எல்லையாகுமாறு இப் பரந்த உலகின் தோற்றத்தையும் அதனில் வாழும் அளவிலாத உயிர்களையும் ஆகமாகக் கொண்ட இறை நிலையினையும் கூறி, முந்நீரால் நிறைந்த கடலின் மூலம், படைத்தல், காத்தல், அழித்தல் என்ற இறைவரது முத்தொழிலையும், மெய்ந்நிலையினையும் குறிப்பாகவும் வெளிப்படையாகவும் உணர்த்துவாராயினார்.

மதுரை மூதூரின் காட்சி நலனைக் கூறுங்காலை, மருதனார் பாண்டிய மன்னரது குடிச்சிறப்பும், கூடற்றமிழின் வளமும், நாட்டின் பிறவள நலனும் வெளிப்படையாகப் புலனாக்கியுள்ளார். அவ்வாறு செய்யுங்காலை மருதனார் ஞானக் கருத்துக்களையும் வாழ்க்கையிற் பயன்படும்படியாகவும் விரும்பி விளக்கியுள்ளார். அவர் 'அன்னாய் நின்னொடு முன்னிலை எவனோ'

(206) என்றதின்வழி, யான், எனது எனும் இரண்டும் ஒழிந்த சான்றாண்மை நிலையே ஞானமென உணர்த்தியுள்ளார் மற்றும் காண்பான் காணப்படும் பொருள். காட்சி ஆகிய இம் மூன்றும் முற்றும் அற்ற அதீத நிலையே மெய்ஞ்ஞானமென்றும், அம்மெய்ஞ்ஞானத்தின் வழி அறிதல், அன்பு செய்தல், தொழிலியற்றல் ஆகிய மூன்று ஆற்றல்களையும், மன்னனும், குடி மக்களும் கொண்டு வாழ்க்கையினை நடத்தல் வேண்டுமென வற்புறுத்துவாராயினார். இதனான் மன்னனுக்கும் குடிமக்களுக்கும் மருதனார் இறைவனது உண்மை வடிவும், அமைதி வடிவும் நன்மை வடிவும் முறையே வாழ்வினில் சுதந்திர உணர்வுடன் பெற்று, அன்னாரை பேரின்பமுற வைத்துச் சுவைக்கும் முறையில் புகுமாறு, அநுபூதி நெறி வாயிலாக விளங்க வைத்தார்.

மற்றும் மதுரை நகரின் காட்சி வளனையும் பிற நலனையும் கூறும்போதும், நிலையில்லாத காலமும் யாமமும் அவ் வப்போதின்கண் நிகழும் நிகழ்ச்சிகளுடன் இயல்பாய் கழிதலையும் மருதனார் குறிப்பாராயினார். இளமை, யாக்கை, செல்வம் ஆகியவற்றின் நில்லாமையினையும், தோல்வியுற்ற பகை மன்னர்கள் மேலிட்டு குறிப்பாகக் காணவைத்து உணர்த்தி, அவையாவும் உலகம் உள்ளளவும் வியத்தகு முறையில் நிலையாய் நிலைத்து நிற்குமாறு மாங்குடியார் நளினமும் அமைதியும் விரவ வலியுறுத்தி கடவுட்டன்மை வயங்குமாறு படைத்தமை அவரது வீறுற்ற தெய்வப் புலமையாற்றலின் அருமையினை எடுத்துக் காட்டா நிற்கும். மற்றும் இப்பாட்டின்கண்ணும் ஆங்காங்கே, மருதனார் காஞ்சித் திணைப் பொருளினையும் நுணுக்கமாக உணரவும், குறிப்பாற் புலப்படுமாறும், புலனும் மனனும் மாண்புற்று பயன்பெறும் முறையில்; மன்னனுக்கும் குடிமக்களுக்கும் உய்த்துணர வைத்துள்ளார்.

இப்பாட்டு கலைபயில் முயற்சியில் மேம்பட்டு வாழ்விற்குரிய மாட்சிமையினை தெளிய உணர்த்தி யாவர்க்கும் பயன்படுமாறு இருமை நலங்கள் நிறைவுறும்படி மாணொளி விளக்கத்துடன் திகழ்வதாகும். இஃது பொருளிலக்கணத்து இயலழகு உடையதாய், மக்கள் அறிவு வளர்ச்சி யெய்திட பாடலுள் வெகுவாக பயின்று வரும் மரபுடன் முதல், கரு, உரிப் பொருள்கள், அகம் புறம் எனும் இயற்கை முறையில் காரண காரியப் பயனுமாய் பாட்டினில் இழைந்தோடும் வண்ணம் யாக்கப் பட்டிருத்தலால், வாழ்வின் உண்மையாய சீரிய கருத்துக்கள் இப்பாட்டகத்தே நுட்ப திட்பச் செறிவுடன் இயல்பாய் விளங்குவது நுனித்தறியற் பாலது. மற்றும் இப்பாட்டு உலகியற் பொருள்கள்பால் திகழும்

உணர்வு கவரும் இயற்கைத் தன்மைகளையும் உண்மை களையும் உள்ளவாறே சுட்டிக்காட்டி ஆங்காங்கே இறை யருள் விளக்கங்களை இனிமையுற தெளிவு படுத்தலால் இஃது இயற்கைமுறை வழுவாது உலகுயிர்களோடு இணைந்து நிற்கும் இறையியலை சீரிய வகையாக வழுத்தும் உண்மைப் பாட்டாகும். முதற்பொருள் கருப் பொருளாகியவற்றின் விளக் களை அவற்றின் சிறப்பியல்புவகை தோன்ற வீரிவாக மொழி யப்பட்டு அதன்கண் நிலையாமைக் குறிப்பால், விழுப்பமுணரும் காஞ்சித் திணையை மெய்ம்மை தேற்றும் முறையில் அறிவுறுத் தும் இப்பாட்டின் கருத்தழகு, புலம் படைத்தாரது உள்ளத்தைக் கவருதல் திண்ணம்.

இப்பாட்டு வாழ்வில் காண இயலாத பல்வேறு உண்மைகளை முருகுணர்ச்சிபட நல்கி வாழ்விற்கு உரியதாக வுள்ள பெரு மிதத்தை அளித்துத் திகழ்கிறது. வாழ்விலிருந்து மெய்ம்மை யால் மலரும் உண்மைத் தத்துவங்களை இப்பாட்டு தக்கமுறை யில் உணர வைத்து வாழ்விற்காக நிலைபெறும் மாட்சியோடும் ஆட்சியோடும் விளங்குகிறது பன்னயங் கெழுமிய இப்பாட்டு அறம் பொருள் இன்பமெனும் மூன்றையும் புரிதற்கு உதவும் வாழ்வின் ஒழுக்க உண்மைகளை மக்களுக்குப் புகட்டி, அவைவழி வாழ்க்கையை கண்ணுங் கருத்தாய் ஆற்றி தம்மைத்தாமே உணர்ந்து போற்றுதல் மூலம் பெறப்படும் உண்மைத் துறவு பேறும் ஞானவிளக்கமும் விழுப்பத்துடன் உணர்த்தும் பெற்றிமையினையுடையது. நிலையாமை முதலியவற்றை தன்னகத்தடக்கிய இப்பாட்டு, பெரும் பொருள் தோன்றத் திகழும் பொன்மொழிகளால் நல்லறிவுச் சுடர் கொளுத்தும் பான்மை கருத்திற் பெரிதும் பதிக்கற்பாலது. இப்பாட்டு வாழ்வு நலத்தை ஆதாரமாகக் கொண்டு, கல்வி கேள்விகளாலாய சிறந்த ஒழுக்கத்தையும் நுண்ணுர்வினையும் வாய்மையின்வழித்தாய மன நலத்தையும் தெளிவுடன் அளித்து மேன்மேலும் விழுப்பேற்றிற் குரிய அறிவு விளக்கம் விரிதலுற மக்களை அருளொளியராக மிளிர வைக்கும் ஏற்றமும் எழிலமைப்பினையும் தனக்கே உரிய தாகக் கொண்டுள்ளது.

இப்பாட்டின் எழில் நலம் சொல்வன்மை பொருள் நலம் என்ப வற்றுள் அடங்கி, கிளர்ச்சியும் இன்பமும் வழங்குவ்வகை மாணப் பெரிதாகும் சொல்லும் பொருளும் அததுவாக இப்பாட்டினிலே அமைந்து. நினைக்குந்தோறும் உணருந்தோறும் உள்ளொளி யினைப் பெருக்கி அறிவு இச்சை செயல்களை அமைவுறச் செய்யும் வன்மையும் வனப்பும் வாய்ந்து, காஞ்சித்திணை இயல்புவழித்தாய மனநலத்தையும், அமைதியையும் ஒருங்கே

அளிக்கும் இயல்புடையது இத்தகைய இயல்பினை ஒருபடித்தாய் உள்ளத்துள்ளே அடைவிப்பது கூடற்றமிழின் மாண்புடைத் தொழிலாகும். கூடற்றமிழ், எண்ணத்தின்வழி இயங்கும் எளிய இயல்புடன், அறிவிற்குத் துணை செய்யும் சிறப்பும் செம்மையும் சான்றது. கூடற்றமிழ்ச் சொற்கள் பொருட்கருவைப் பயனுற அறிவிக்க வல்லவை; அறிவைப்பற்றி, உணர்வை எழுப்பி இன்பம் பயப்பவை; உயர்ந்த உயிர்த் தத்துவத்தை நன்கு புலப்படுத்தக் கூடியவை; சொல்வளத்தாய அழகுணர்ச்சியோடு கலந்து வாழும் காட்சியை எடுத்துக் காட்டும் பான்மையுடையவை; எவ்வழியிலாயினும் மெய்ம்மையிற் செலுத்தி இன்புறுத்தும் வகை வாய்ந்தவை; பொருளொடு தழுவிச் சென்று நறுஞ்சுவையினையும் பயனையும் ஆற்றலுடன் அழகொழுக அளிக்கவல்லவை. எனவே கூடற்றமிழ் மொழிநுணுக்கப் பொருள்களையும் ஐயமற விளக்கும் கருத்து விளக்கமுடைய மொழி; கவர்படு பொருளிலாது செப்பம் பொருந்திய மொழி; வீடுபேறு விழைவு மிக்காரை இறைபால் நண்ணவைக்கத் துணை புரியும் உறுதிப்பாடுடைய நன்மொழி; அற முதல் நாற் பொருள்களையும் பழுதற உணர்த்தி இறைபால் எய்துவித்து பேரின்பப் பேற்றினை அளிக்கும் பயனுடைய இன்மொழி. அறிவொடு பிரியாத கூடற்றமிழை யுணர்ந்தார் கூடிவாழும் மரபுடையராவர். இத்தகைய நல்லியல்பு அமைந்து வீறுகொண்டு திகழும் கூடற்றமிழ் மொழியும் அதன் இன்சுவைச் சொற்களும் மதுரைக் காஞ்சிப் பாட்டை உயிருணர்வு நல்கும் பொலிவுடையதாக, அடிகள்தோறும் தொடர்ந்து விளங்குவதினான், அதனை பிற்றைநாட் சான்றோர் ஒருவர், தம் நுண்ணறிவுடைமையினைப் புலப்படுத்தும் வகையில் 'தண்டாரான் கூடற்றமிழ்' எனச் சிறப்பு தோன்ற அறிவுறுப்பாராயினர்.

(தொடரும்)

# கீழ்க்கணக்கில்
# சில - புதிய
# —: தொழிற்பெயர் வடிவங்கள் :—

முனைவர் ஆதித்தன்

தொல்காப்பியர் எழுத்ததிகாரத்தில் புணர்ச்சியினைக் கூறுங்கால் தொழிற்பெயர்கள் சிலவற்றைச் சுட்டுகின்றார். (தொல். எழுத்து: 236, 298, 306, 309, 327, 328, 345, 376, 382, 401, 402). ஈண்டுச் சுட்டப்பெறும் தொழிற்பெயர்கள் அனைத்தும் வினையடிகளாக அமைந்துள்ளன. இவ்வடிச் சொல் அமைப்புடைய தொழிற்பெயர்கள் புணர்ச்சியின் போது 'உ'கரம் பெற்றுவரும் என்பதனையும் தொல்காப்பியர் கூறுகின்றார் (தொல். எழுத்து: 296, 298).

அடிச்சொல் அமைப்புடைய தொழிற்பெயர்கள் மட்டுமன்றி விகுதி பெற்ற தொழிற்பெயர்களும் தொல்காப்பிய மொழியில் காணக் கிடைக்கின்றன ( நிற்றல், தொல். எழுத்து: 151, அஞ்சல், தொல். சொல்: 70). அடிச்சொல் அமைப்புடைய தொழிற்பெயர்கள், விகுதி பெற்ற தொழிற்பெயர்கள் நீங்கலாகச் சில புதிய அமைப்பினைக் கொண்ட தொழிற்பெயர் வடிவங்கள் பதிணெண் கீழ்க்கணக்கில் காணக்கிடைக்கின்றன.

**வினையாலணையும் பெயரில் அமைப்புடைய தொழிற் பெயர்கள்:**

செல்வது வேண்டின் அறஞ்செய்க

(நான்மணிக்கடிகை. 17: 3)

மன் கிளர்ந்த போலும் கடற் சேர்ப்ப

(திணைமாலை நூற்றைம்பது, 53:2)

ஊண் இல் சுற பிறழ்வ போன்ற புனல் நாடன்

(களவழி நாற்பது, 9: 3)

வெள்ளி வெள்நாஞ்சிலான்
ஞாலம் உழுவன போல்

களவழி நாற்பது, 40: 1)

ஈண்டுக் கொடுக்கப்பெற்ற சான்றுகளில் வரும் 'செல்வது' என்னும் வடிவம் ஒன்றன்பால் வினையாலனையும் பெயரின் அமைப்பினையும் ஏனை 'கிளர்ந்த', 'பிறழ்வ', 'உறழ்வன' என்னும் வடிவங்கள் பலவின்பால் வினையாலணையும் பெயரின் அமைப்பினையும் உடைய தொழிற்பெயர் வடிவங்களாகும்.

சுமில் சுவலபில் (1959, பக்: 178-185) இத்தகைய தொழிற் பெயர்களைக் காலங்காட்டும் தொழிற்பெயர்கள் எனக் குறிப்பிடுகின்றார். கால்டுவெல் (1956 பக்: 540-554) இவற்றைத் தொழில் வினையாலணையும் பெயர்கள் எனச் சுட்டுகின்றார். ஒரே அமைப்பினைக் கொண்ட தொழிற் பெயர்களையும் வினையால் அனையும் பெயர்களையும் பிரித்தறிதல் தேவையாகின்றது. தொடரியல் நிலையில் இவ்விருவகைப் பெயர்களும் வினையெச்சம் வினையடை ஆகியனவற்றால் சிறப்பிக்கப் பெற்றுவரும். ஒரே அமைப்பினைக் கொண்ட இவ்விருவகைப் பெயர்களையும் பயன் நிலையில் அதன் பொருளை அடிப்படையாகக் கொண்டு தான் பிரித்தறிதல் இயலும் (ஆதித்தன், 1979, பக்: 16-20).

**வினையெச்ச**
**அமைப்புடைய தொழிற்பெயர்கள்:**

1. செய்து வாய்ப்பாட்டுத் தொழிற்பெயர்கள்:

விளக்குப் புக இருள் மாய்ந்தாங்கு ஒருவன்
(நாலடியார், 51: 1)

பெட்டாங்கு செய்தொழுகும் பேதை
(திரிகடுகம்: 99: 2)

இவ்விரு சான்றுகளிலும் காணப்பெறும் 'மாய்ந்து', 'பெட்டு' என்னும் இரு செய்து வாய்ப்பாட்டு வினையெச்ச வடிவங்களும் 'ஆங்கு' என்னும் உவம உருபிற்கு முன்பாக 'மாய்தல்', 'விரும்புதல்' என்னும் பொருண்மையில் தொழிற்பெயர்களாகச் செயலாற்றுகின்றன. உவம உருபிற்கு முன்னர் வரும் வடிவம் பெயராக அமையுமேயன்றி வினையாக அமைதல் இல்லை. இச் சான்றுகளில் உவம உருபிற்கு முன்னர் வரும் இருவடிவங்களும் தொழிற்பெயர்களாகச் செயலாற்றுகின்றன.

(தொடரும்)

# எழுத்துச் சீர்திருத்தம் பற்றி ஒரு விளக்கம்*

—வை. தங்கமணி

## [2]

உயிரில் பதினொரு வரிவடிவமும், ஆய்தம் ஒன்றும், உயிர் மெய்ப் பதினெட்டும், ஆகாரக்குறி ஒன்றும், இகரக்குறி ஒன்றும், ஈகாரக் குறி ஒன்றும், உகரம், ஊகாரக்குறி இரண்டும் சேர்த்து ஒன்றும், எகரக்குறி ஒன்றும், ஏகாரக்குறி ஒன்றும், ஐகாரக்குறி ஒன்றும் ஆக முப்பத்தெட்டுக் குறிகளையும் நினை வீற் கொண்டால் கற்றலுக்கும், தட்டெழுத்துக்கும் வடிவமைப்பில் ஒன்றாக அமைவதோடு, எளிமையுமாம் என்பதை நண்குணரலாம் திருத்திய வரிவடிவ அமைப்பு கீழே தரப்பட்டுள்ளது கண்டு தெளிவு கொள்க.

உயிர்

அ ஆ இ ஈ உ ஊ எ
ஏ ஐ ஒ ஓ ஔ

ஆய்தம்

ஃ

மெய்

க் ங் ச் ஞ் ட் ண் த் ந் ப்
ம் ய் ர் ல் வ் ழ் ள் ற் ன்

உயிர்மெய்

க் + அ = க, க் + ஆ = கா,
க் + இ = கி, க் + ஈ = கீ,
க் + உ = க), க் + ஊ = க)),
க் + எ = கெ, க் + ஏ = கே,
க் + ஐ = கை, க் + ஒ = கொ,
க் + ஓ = கோ, க் + ஔ = கௌ

*துணர் 55, மலர் 8, பக்கம் 194-இன் தொடர்ச்சி.